09.07.2025 **OS.No. 175 / 2019**

**வா.சா. 1 பெயர்: ராஜேந்திரன் த/பெ. முனியன்**

**சாட்சி ஆஜர். சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்**

**குறுக்கு விசாரணை:**

1ம் பிரதிவாதி கோவிந்தராஜ் எனக்கு பழக்கமானவர் என்றால் சரிதான். கோவிந்தராஜ் ஊருக்கும் எனது ஊருக்கும் இடையிலான தூரம் எவ்வளவு என்றால் 25 கிலோ மீட்டர் இருக்கும். எனக்கும் கோவிந்தராஜ்க்கும் கட்சி மூலம் பழக்கம் என்றால் சரிதான். நாங்கள் இருவரும் கட்சியில் ஒன்றாக் பணியாற்றினோம் என்றால் சரிதான். நான் கோவிந்தராஜ்யை மாவட்ட செயலாளராக்க வேண்டும் என தூண்டினேனா என்றால் இல்லை. அதற்காக நான் செலவு செய்தேன் என்றால் சரியல்ல. அவ்வாறு செலவு செய்ததற்காக தான் வா.சா. ஆ. 1 பத்திரம் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்து எவ்வளவு என்றால் 1 ஏக்கர் 54 செண்ட் ஆகும். ஒப்பந்த பத்திரம் ஏற்படுவதற்கு முன்பு தாவா இடத்தை பார்தேனா என்றால் பார்த்தேன். அது கோவிந்தாபுரம் பக்கம் உள்ளது. தாவா சொத்து கோவிந்தராஜிக்கு எவ்வாறு பாத்தியம் என்று தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். அவருக்கு எவ்வாறு பாத்தியம் என்றால் அவரது பெயரில் பத்திரம் இருந்தது. அது அவரது பூர்வீக சொத்தாகும். கோவிந்தராஜ் பெயரில் உள்ள பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். கோவிந்தராஜ் எதற்காக நிலத்தை விற்பதாக சொன்னார் என்றால் குடும்ப பிரச்சனைக்காக விற்பதாக சொன்னார். மேற்படி விவரத்தை வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். கோவிந்தராஜ் என்னிடம் கடன் எவ்வளவு கேட்டார் என்றால் இல்லை. 1 1/2 ஏக்கரை 4 லட்சத்திற்கு நிலத்தை வாங்கி கொள்ளுமாறு சொன்னார். மேற்படி வா.சா.ஆ.1 மைனர் பிள்ளைகளையும் சேர்த்து வாங்கினேனா என்றால் எதிர்காலத்தில் பிரச்சனை வரக்கூடாது என்பதற்காக சேர்த்து எழுதப்பட்டது. அது குறித்து கோவிந்தராஜ் மனைவி மற்றும் பிள்ளைகளிடம் கோவிந்தராஜ் நிலம் விற்பது பற்றி கேட்டேனா என்றால் அவரது மனைவியிடம் கேட்டேன். மைனர் சொத்துக்களை கிரையம் பெறுவதற்காக மாவட்ட நீதிமன்றத்தில் அனுமதி பெற நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. மைனர் சார்பாக நீதிமன்ற அனுமதி இன்றி வா.சா.ஆ.1 இல் ஏற்படுத்தப்பட்டுள்ளதால் அது செல்லதக்கது அல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்து மூதாதையர் சொத்து என்பதால் மைனர் குழந்தைகள் நலனுக்கு எதிராக வா.சா.ஆ. 1 ஏற்படுத்தியுள்ளதால் அது செல்லக்கூடியது என்றால் சரியல்ல. ஒப்பந்தம் எந்த தேதி போடப்படட்டது என்றால் 26.09.2018 ஆகும். அன்றைய தேதியில் எவ்வளவு பணம் கொடுத்தேனா என்றால் 3 லட்சம் கொடுத்தேன். மேற்படி தொகையை கோவிந்தராஜ் இடம் கொடுத்தேன். கிரைய காலம் எவ்வளவு காலம் கொடுக்கப்பட்டது என்றால் 11 மாதம் ஆகும்.

மேற்படி காலத்திற்குள் கிரையம் செய்து கொண்டோமோ என்றால் இல்லை. 02.06.2019 தேதியில் மீதி இருந்த 1 லட்சம் சாட்சிகள் முன்னிலையில் கொடுத்தேன். அந்த தேதியில் கிரையம் ஏற்படுத்தப்பட்டதா என்றால் இல்லை. என்ன காரணம் என்றால் சர்வேயர் பல முறை அழைத்தும் வரவில்லை என காரணம் சொன்னார். அவ்வாறு சர்வேயர் வராதபோதும், இடம் அளக்காத போதும் எதற்காக ரூ.1,00,000/- கொடுத்தேன் என்றால் கோவிந்தராஜ் பிரச்சனையாக உள்ளது என கேட்டதால் ரூ.1,00,000/- கொடுத்தேன். நான் கூறும் காரணம் பொய்யானது என்றால் சரியல்ல. கிரையம் கொடுக்கும்போதுதான் மீதி பணம் கொடுப்பது வழக்கம் என்றாலும் கிரையம் ஏற்படுத்தி கொள்ளாமல் ரூ.1,00,000/- கொடுத்தாக கூறுவது மேற்படி ஆவணத்தின் தன்மையை கேள்வி குறி ஆகிறது என்றால் சரியல்ல.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

**ஒம்/- திரு.பா. திருஞானசம்பந்தம். பி.ஏ., பி,எல்.,**
**சார்பு நீதிபதி,**
**ஊத்தங்கரை.**